செ.வெ.எண்.10 நாள்: 04.08.2019

# தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டினம் நகராட்சி பகுதியில் புயல் மற்றும் நகர்ப்புற வெள்ளம் குறித்த மனிதாபிமான உதவி மற்றும் நிவாரண பயிற்சி ஒத்திகை நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று நடைபெற்றது.

---

தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டினம் நகராட்சி பகுதியில் வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, இந்திய கடற்படை மற்றும் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்துடன் இணைந்து கடலோர பகுதியில் புயல் மற்றும் நகர்ப்புற வெள்ளம் குறித்த மனிதாபிமான உதவி மற்றும் நிவாரண பயிற்சி ஒத்திகை நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று (04.08.2019) நடைபெற்றது. இந்தநிகழ்ச்சியில் வருவாய் துறை, காவல்துறை, தீயணைப்புதுறை, மீன்வளத்துறை, நகராட்சி நிர்வாகம், சுகாதாரத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகள் ஒருங்கிணைந்து இப்பயிற்சி மேற்கொள்ளப்பட்டது.

இப்பயிற்சியின் போது காயல்பட்டிணம் மேட்டுகுளம் சாலை பகுதியில் உயர்மட்ட தொட்டி இடிந்து விழுந்து விபத்து மீட்புபணிகள் ஒத்திகை, காயல்பட்டிணம் எல்.கே.மெட்ரிகுலேசன் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பள்ளி குழந்தைகளை மீட்கும் ஒத்திகை, கால்நடைகளை மீட்டு சிகிச்சை அளிக்கும் ஒத்திகை, இறந்த கால்நடைகளை பாதுகாப்பாக அப்புறப்படுத்துதல் குறித்த ஒத்திகை, கடற்கரை பகுதியில் கொம்புதுரை பல்நோக்கு புகழிட மையத்தில் பாதிக்கப்பட்ட மக்களை தங்கவைத்தல் மற்றும் முதலுதவி சிகிச்சை அளித்தல் ஒத்திகை நிகழ்ச்சிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. மேலும் துண்டிக்கப்பட்ட மின்சாரத்தினை பழுது பார்க்கும் ஒத்திகை, வெள்ள பாதிப்பின் போது கடற்கரை பகுதியில் உள்ள மீன்பிடி படகுகளை பாதுகாப்பாக மேட்டு பகுதியில் வைத்தல் உள்ளிட்ட பல்வேறு ஒத்திகைகள் நடத்தப்பட்டது. மேலும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்டு கே.டி.எம். மருத்துவமனையில் அவசர சிகிச்சை செய்யும் ஒத்திகை நிகழ்ச்சி உள்ளிட்டவைகளும் நடத்தப்பட்டது.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:

தமிழ்நாடு அரசின் உத்தரவுப்படி மாநிலத்திலுள்ள கடற்கரை பகுதியில் உள்ள கிராமங்களில் பேரிடர் மேலாண்மை ஒத்திகை நிகழ்ச்சி இன்று நடத்தப்பட்டது. உண்மையான புயல் வந்தால் எந்த மாதிரியான பாதிப்புகள் ஏற்படும், அந்த சமயங்களில் அதிகாரிகள் தயார் நிலையில் உள்ளார்களா, தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதா இது போன்ற பல்வேறு நடவடிக்கைகளை பரிசோதிக்கும் விதமாக இந்த ஒத்திகை நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. மேலும் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல், புயல் நிவாரண மையங்கள் தயார் நிலையில் உள்ளதா மற்றும் பாதிக்கப்பட்ட மக்களை மீட்டு புயல் நிவாரண மையங்களுக்கு எவ்வாறு கொண்டு செல்வது, அங்கு தேவையான மருந்துகள் இருப்பில் வைக்கப்பட்டுள்ளனவா, அதே போல் கால்நடைத்துறை மூலம் கால்நடைகளை மீட்டு அவைகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனவா என இதுபோன்ற பல்வேறு துறைகளின் நிலையை தெரிந்து கொள்ள இந்தஒத்திகை நிகழ்ச்சி இன்று நடத்தப்பட்டது. தூத்துக்குடி மாவட்டத்தில் காயல்பட்டினம் நகராட்சி கொம்புதுரை கிராமம் தேர்வு செய்யப்பட்டு காலை 10 மணிக்கு ஒத்திகை நிகழ்ச்சி தொடங்கி

நடத்தப்படுகிறது. நேற்றைய தினத்தில் இருந்தே பொதுமக்களுக்கு எச்சரிக்கை அறிவிப்பு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஒவ்வொரு துறையும் குறிப்பாக வருவாய் துறை, தீயணைப்புதுறை, கடலோர காவல்படை உள்ளிட்ட பல்வேறு துறைகள் மற்றும் தேசிய மாணவர் படை, சத்யசாய் தொண்டு நிறுவனம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளும் இங்கு வரவழைக்கப்பட்டன. ஒவ்வொரு துறை சார்பில் எந்த மாதிரியான மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என ஒத்திகை நிகழ்ச்சிகள் செய்யப்பட்டன. குறிப்பாக வருவாய் துறை மூலம் எவ்வாறு மீட்புபணிகளை மேற் கொள்வது, சுகாதார துறையின் மூலம் 108 ஆம்புலன்ஸ் உள்ளிட்ட வசதிகள், காவல்துறை மூலம் போக்குவரத்து வசதிகள் செய்வது உள்ளிட்ட பல்வேறு ஒத்திகைகள் சுமார் 2 மணிநேரம் செய்யப்பட்டது. இந்த ஒத்திகை நிகழ்ச்சிக்கு மக்களிடையே நல்ல வரவேற்பு இருந்தது. மேலும், ஒரு பேரிடர் நடந்தால் மக்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், அலுவலர்களுக்கு எவ்வாறு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என பயிற்சி அளிக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட பகுதியை தேர்வு செய்து பேரிடர் மேலாண்மை ஒத்திகை நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஒத்திகை நிகழ்ச்சி மூலம் அலுவலர்களுக்கு நல்ல பயிற்சியாக அமைந்துள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசினார்.

நிகழ்ச்சியில் தூத்துக்குடி சார் ஆட்சியர் திரு.சிம்ரான் ஜீத் சிங் கலோன், இ.ஆ.ப., திருச்செந்தூர் வருவாய் கோட்டாட்சியர் செல்வி.தனப்ரியா, திருச்செந்தூர் காவல் துணை கண்காணிப்பாளர் திரு.பாரத், மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி.அமுதா, சுகாதாரபணிகள் துணை இயக்குநர் மரு.கீதாராணி, மீன்வளத்துறை உதவி இயக்குநர் திருமதி.பாலசரஸ்வதி, கால்நடைத்துறை உதவி இயக்குநர் திரு.ஆண்டனிசுரேஷ், காயல்பட்டினம் நகராட்சி ஆணையர் திருமதி.புஷ்பலதா, திருச்செந்தூர் வட்டாட்சியர் திரு.தில்லைப்பாண்டி, திருச்செந்தூர் தீயணைப்புத்துறை அலுவலர் திருமதி.நட்டார் ஆனந்தி, நிலைய அலுவலர் (போக்குவரத்து) திரு.முத்துக்குமார் மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.